# போலீஸ் பார்வை

POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-11 • Volume-11 • இதழ்-2 • Issue-2 • டிசம்பர்-2025 • December -2025 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV

E_Book: www.policeparvai.com



## சோனியா, ராகுல் மீது புதிய வழக்கு பதிவு

## வழக்குகளை வெல்வதை விட மனங்களை வெல்வதே முக்கியம்




## ரூ.48 லட்சத்தை ஏமாற்றிய குற்றவாளிகள் திரும்ப மீட்டு வழங்கிய காவல் ஆணையர் திருமதி.N.காமினி IPS அவர்கள்







## அம்பேத்கரின் கடைசி உதவியாளர் பகவான் தாஸ்

## புதிய சகாப்தத்தில் தெளிவாக நுழையும் உச்ச நீதிமன்றம்



10 ரூபாயில் சர்க்கரை நோய்க்கு தீர்வு கிடைக்கிறதா?



www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...



டிசம்பர் 2025: பண மழையில் நனையும் ராசிகள்


திருச்சியில் ஓர் இனிய உதயம்!
தரமான மளிகை
மலிவான
விலையில் உங்கள்
இல்லம் தேடி...
ஒரே ஒரு போன் கால்
SR
Our Grocery
SR OUR GROCERY
Digital Market @ you're Door Step
No.8, Erumbeeswarar Nagar, Thiruverumbur,
Trichy - 620 013. Tamilnadu.
E-mail:srourgrocery@gmail.cm | Web: srourgrocery.com
9894890808
8610643636


ROLLER
SKATING
7 Star
Sports Academy


AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU
Affiliated to :
AEROSKATOBALL FEDERATION OF INDIA
No.8, First Floor, Erumbeeswarar Nagar,
Thiruverumbur,
Trichy - 620 013.Tamil Nadu.
FIT
INDIA
Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846
Aeroskato Ball Association
Tamilnadu

# போலீஸ் பார்வை

டிசம்பர் 2025 மலர் 11 இதழ் 2



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், U.மதனகோபால், K.மனோஹரன், K.K.ஞானேஸ்வரன்

International Legal advisor : **Ramachandran Saravanan B.A.,LLB., D.L.L..,LLM**

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L., S.ரவிச்சந்திரன் M.A., B.L, K.அருணாச்சலம் B.Com., LLB

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., LLB.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன், J.ஜெயவேல்முருகன்,

**சிறப்பு நிருபர்கள்** : V.Vivek Bomb, SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, K.பாபு, R.மணிமாறன், M.வெங்கடேசலு, குரு.சரவணன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், G.நந்தகுமார், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர்தீன், L.லூயில்பெர்ணான்டஸ், P.ராஜராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார், A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வ நயினார், K.விமல்ராஜ், R.ஜோதிபாசு, K.சதீஷ்குமார், R.நந்தகுமார், J.மணிகண்டன், S.வெங்கடேஷ், V.சுகுமாரன், K.பில்லர், R.சங்கர், Dr.J.காந்தியப்பன், S.ஜெயந்தி செல்வம்



அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099.
Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com,
Website.www.policeparvai.com



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only






# புதிய சகாப்தத்தில் தெளிவாக நுழையும் உச்ச நீதிமன்றம்

***உ**ச்ச நீதிமன்ற நெறிமுறையை தலைமை நீதிபதி சூர்யா காந்த் ஒரு உலுக்கு உலுக்கினார். விஜபி கலாச்சாரத்திற்கு எதிரான ஒரு தீர்க்கமான நடவடிக்கையாக, உச்ச நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர்கள் வாய்மொழியாக "வரிசையில் தாவி" பேசுவதற்கான நீண்டகால சலுகையை இந்திய தலைமை நீதிபதி சூர்யா காந்த் அதிகாரப்பூர்வமாக முடிவுக்குக் கொண்டு வந்துள்ளார். இனிமேல் அவசர பட்டியல்களுக்கு மூத்த வழக்கறிஞர்களால் இனி சிறப்பு வாய்மொழி குறிப்புகள் இல்லை. அனைத்து அவசர விஷயங்களும் முறையான எழுத்துப்பூர்வ நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.*

*இளைய வழக்கறிஞர்கள் குறிக்கிட அனுமதிக்கப்படலாம். ஆனால் உண்மையிலேயே விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே. இது உச்ச நீதிமன்றத்தின் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மை, சமத்துவம் மற்றும் ஒழுக்கத்தை நோக்கிய ஒரு பெரிய மாற்றத்தைக் குறிக்கிறது.*

*ஆனால் தலைமை நீதிபதி அதோடு நிற்கவில்லை. தேசிய நீதித்துறை நியமன ஆணையத்தை (NJAC) மீண்டும் செயல்படுத்துவதை உச்ச நீதிமன்றம் மறுபரிசீலனை செய்யலாம் என்றும் தலைமை நீதிபதி சூர்யா காந்த் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*இது நீதித்துறை நியமனங்களுக்கான தற்போதைய கொலீஜியம் முறையை இறுதியில் மாற்றக்கூடிய ஒரு சாத்தியமான நடவடிக்கையாகும். இது பின்பற்றப்பட்டால், பல தசாப்தங்களில் மிக முக்கியமான நீதித்துறை சீர்திருத்தங்களில் ஒன்றாக இது மாறும். உச்ச நீதிமன்றம் தெளிவாக ஒரு புதிய சகாப்தத்தில் நுழைகிறது.*

**ஆசிரியர்**

## இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...

'போலீஸ் பார்வை' மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.





# அம்பேத்கரின் கடைசி உதவியாளர் பகவான் தாஸ்

பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் கடைசி உதவியாளர் பகவான் தாஸ். பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் ஆங்கில நூல் தொகுப்புகள், இன்று நமக்கு கிடைப்பதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்பே (1963–1980) 4 தொகுப்புகளை ‘Thus Spoke Ambedkar’ என்ற தலைப்பில் தன் சொந்த முயற்சியால் வெளியிட்டவர் பகவான் தாஸ் அவர்கள்.

தன்னுடைய 16–வது வயதில் பட்டியல் சாதியினர் கூட்டமைப்பில் தன்னை இணைத்துக் கொண்ட பகவான் தாஸ், பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களுடைய இறுதிக் கட்டத்தில் (1955–56) அவருக்கு ஆய்வு உதவியாளராகப் பணியாற்றியிருக்கிறார்.

இமாச்சலப் பிரதேசத்தில் தூய்மைத் தொழிலாளர் குடும்பத்தில் பிறந்த இவர், மெட்ரிகுலேஷன் படிப்பை முடித்துவிட்டு, இரண்டாம் உலகப் போரின்போது இந்திய விமானப் படையின் ராடார் பிரிவில் பணியாற்றினார்.



1957–ல் ரமாதேவி என்பவரை வாழ்விணையராக்கிக் கொண்டார் பகவான்தாஸ். இவர்களுக்கு ராகுல்தாஸ் என்ற மகனும், சுராதராபுரி மற்றும் சோயாஹட்கே என்ற 2 மகள்களும் இருக்கிறார்கள். பாபாசாகேப் அம்பேத்கரால் பெரிதும் ஈர்க்கப்பட்ட பகவான் தாஸ், தன்னையும் குடும்பத்தையும் பவுத்தத்தில் இணைத்துக் கொண்டார்.

1970–களுக்குப் பிறகு அரசியல் விஞ்ஞானத்திலும், சட்டத்திலும் தேர்ச்சி பெற்ற பகவான் தாஸ் 20–க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அதில் குறிப்பாக, ‘நான் ஒரு தூய்மைத்தொழிலாளி’ என்ற இந்தி நூல் தனிச் சிறப்பைக் கொண்ட புகழ் பெற்ற நூலாகும்.

1983–ல் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகள் ஆணையத்தில், தீண்டாமை தொடர்பான ஆதாரங்களை முன்வைத்து, இவர் ஆற்றிய உரை மிகுந்த வரவேற்பைப்பெற்றது.




1998–ல் மலேசியாவில் நடைபெற்ற உலக தலித் மாநாட்டிலும் முக்கியப் பங்காற்றினார். நம்மை போன்றோருக்கும் பாபாசாகேப் அம்பேத்கருக்கும் இடையிலான நேரடி தொடர்பாகத் திகழ்ந்த பகவான் தாஸ் என்ற ஆளுமை நவம்பர் 18, 2010 அன்றோடு நம்மை விட்டுச் சென்றார். இறுதிவரை ஓர் அம்பேத்கரியவாதியாகவே வாழ்ந்தார் பகவான் தாஸ். பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் உதவியாளர்களில் பலரை இன்றைக்கு இருக்கும் இளைய அம்பேத்கரியவாதிகளுக்கு தெரிந்திருக்க கூடும். பகவான் தாஸ் அவர்களை பற்றி பெரும்பாலனோர் அறிந்து இருக்க வாய்ப்பு குறைவு. அவர் மறைந்து 25 ஆண்டுகள் கடந்த நிலையில் தமிழகத்தில் இவரை பற்றியான உரையாடல் நிகழாமலே உள்ளது. இவரை போன்றோரை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லாமல் இருப்பது நம் எல்லோருடைய பிழை.

# வழக்குகளைவெல்வதைவிட
# மனங்களைவெல்வதேமுக்கியம்

பலஆயிரம்ஆண்டு காலமா அந்த மலை அங்க தான் இருக்கு, கோவிலும் அங்கே தான் இருக்கு. இப்போ அங்க தீபம ஏற்றக்கூடாதுனு சொல்றது எந்த விதத்துல நியாயம்.

சரி, தர்கா விஷயத்துக்கு வருவோம். தர்கா இடத்துக்கு பக்கத்துல விளக்கு ஏற்றுவது தான் பிரச்சனைனா, இஸ்லாம் தோன்றி 1400 வருஷங்கள் தான் ஆகுது.

இஸ்லாம் தர்கா வழிபாடு தவறு என்று சொல்கிறது. அந்த தர்கா கண்டிப்பா அதுக்குப் பிறகு தான் தோன்றியிருக்க வாய்ப்பிருக்கு. ஒரு மாற்று மத தர்கா ஒரு கோவில் அமைந்துள்ள மலையில் உருவாகிறதுனா கண்டிப்பா அப்போதுள்ள இந்துக்களின் மத சகிப்புத் தன்மையே காரணமாக இருக்கும்.

இப்படி இருக்கையில், தேவையில்லாமல் வழக்கை தொடுத்து தீபம் ஏற்றுவதை தடுப்பதால் என்ன ஆகிவிடப் போகிறது. ஒரு பெரும்பான்மை சமூகத்தை பகைத்துக் கொண்டு எப்படி நம்மால், இது மத நல்லிணக்கம் அப்படின்னு சொல்ல முடியும்.

அங்குள்ள தர்கா நிர்வாகம் இது குறித்து பேசி முடிவெடுக்க வேண்டும். இடையில் இரண்டு சமூகத்திற்கு இடையே பகைமையை ஊட்டி பதட்டத்தை உண்டாக்குவது யார் என்பதையும் தீர ஆராய வேண்டும்.

இங்கு வழக்குகளை வெல்வதை விட மனங்களை வெல்வதே முக்கியம்..!

தகவல்: **முஹம்மது பாரிஸ்**






# பாதிக்கப்பட்ட நபருக்கு உதவிய **காவல் கரங்கள்**

## காவல் கரங்கள் இலவச தொலைபேசி எண்களுக்கு அழைக்கலாம்




மதுரை மாநகர காவல் ஆணையர் அவர்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், காவல் ஆணையர் அவர்களின் உத்தரவின்படி, உற்றார், உறவினர்களால் கைவிடப்பட்ட நிலையில், அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை முடிந்திருந்த திரு.ஞானபிரகாஷ் அவர்களுக்கு உதவும் வகையில் ஆள்கடத்தல் தடுப்பு பிரிவு (AHTU) காவல் ஆய்வாளர் அவர்கள் தலைமையிலான “காவல் கரங்கள்” அமைப்பைச் சார்ந்த காவலர்கள் கொடைரோடு செயிண்ட் ஜோசப் கருணை இல்லத்தில் சேர்த்தனர். பாதிக்கப்பட்ட நபருக்கு உதவிய காவல் ஆணையர் அவர்கள் மற்றும் காவல் கரங்கள் அமைப்பை சார்ந்த காவலர்களின் செயலை பொதுமக்கள் வெகுவாக பாராட்டினர்.

மதுரை மாநகர காவல் கரங்கள் அமைப்பின் இலவச தொலைபேசி எண்: 1800–8892–098, 6369860806 மற்றும் சமூக வலைதள முகவரிகளான, முகநூல்: Kaval Karangal (Madurai City), இன்ஸ்டாகிராம்: Kaval Karangal (@ kavalka–rangal–maduraicity), டுவிட்டர்: X– Kaval Karangal Maduri City (@ kavalkarangalM).

சிறப்பு நிருபர்: **பீமராஜ்** மதுரை

## பாராட்டு..




*மதுரை பாத்திமா கல்லூரியில் 30.11.2025-ம் தேதி நடைபெற்ற யோகா போட்டியில் திண்டுக்கல் மாவட்ட ஆயுதப்படை காவலர் திரு.B.சந்தோஷ் அவர்கள் ‘ஏக ஹஸ்த புஜாசன’ ஆசனத்தை தொடர்ந்து 15 நிமிடங்கள் செய்து சாதனை செய்தார். இதை தொடர்ந்து அவருக்கு (ULTIMATE WORLD RECORD) சான்றிதழ் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.A.பிரதீப் IPS அவர்கள் காவலரை நேரில் அழைத்து பாராட்டினார்.*

சிறப்பு நிருபர்: **குரு.சரவணன்** திண்டுக்கல்

# திரு.பொன்.பாண்டித்துரைத் தேவர்



பாலவநத்தம், மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் அமைத்த அமைப்பாளர்களில் ஒருவரும், தமிழறிஞரும் நான்காம் தமிழ்ச் சங்கத்தின் முதல் தலைவராகப் பணியாற்றி செந்தமிழ் (இதழ்) என்னும் இதழ் வெளியிடவும், 'கப்பலோட்டிய தமிழா்' வ.உ.சி யின் சுதேசிக் கப்பல் விடும் பணிக்கும் பொருள் உதவி நல்கியும் திருக்குறளை இன்று நமது கைகளில் சேர்த்த திரு.பொன்.பாண்டித்துரைத் தேவர் அவர்களின் சேவைகளையும், தமிழ் பற்றையும் போற்றுவோம்.



## SP திரு.N.சிலம்பரசன் அவர்கள் தலைமையில்

# திருநெல்வேலியில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம்

திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால் நடத்தப்பட்ட பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

தமிழக காவல்துறை தலைமை இயக்குனர் அவர்கள் உத்தரவுப்படி, பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டம் ஒவ்வொரு புதன்கிழமையும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில், SP திரு.N.சிலம்பரசன் அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது.

இதன்படி, திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மனு கொடுக்க வந்த பொதுமக்களிடம் இருந்து 22 மனுக்களை SP திரு.N.சிலம்பரசன் பெற்றுக் கொண்டார்.

அந்த மனுக்கள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுமக் களுக்கு உறுதியளித்ததுடன், மனு மீதான விசாரணையை விரைந்து முடிக்க சம்பந் தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

நிருபர்: **ஜோதிபாசு** திருநெல்வேலி

# டிசம்பர் 2025

# பண மழையில் நனையும் ராசிகள்




***டிசம்பர் மாதத்தில் சூரியன், செவ்வாய் உள்ளிட்ட நான்கு கிரகங்களின் பெயர்ச்சி நடக்க உள்ளன. இதன் காரணமாக சில ராசி சேர்ந்தவர்களுக்கு தங்கள் வாழ்க்கையில் செழிப்போம், பண வருவாயும் பெருக உள்ளது. இந்த மாதத்தில் புதன் இருமுறை பெயர்ச்சி ஆகிறார்.***

## டிசம்பர் மாத கிரக பெயர்ச்சிகள்

- டிசம்பர் 2–ம் தேதி சுக்கிர பகவான் மகர ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார்.
- டிசம்பர் 7–ம் தேதி செவ்வாய் பகவான் கடக ராசி வக்கிர நிலையான பின்னோக்கி நகர தொடங்குகிறார்.
- டிசம்பர் 15–ம் தேதி சூரிய பகவான் விருச்சிகத்தில் இருந்து தனுசு ராசிக்கு பெயர்ச்சி இருக்கிறார்.
- டிசம்பர் 16–ம் தேதி புதன் பகவான் விருச்சிக ராசியில் வக்ர நிவர்த்தி அடைந்து நேராக நகரத் தொடங்குகிறார்.
- டிசம்பர் 28–ம் தேதி சுக்கிர பகவான் கும்ப ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார்.

## டிசம்பர் மாதம் அதிஷ்ட ராசிகள்

***டிசம்பர் மாதம் சில ராசிக்காரர்களுக்கு வாழ்க்கையில் சாதகமான மாற்றங்கள் ஏற்படும். மாத தொடக்கத்திலிருந்து பல நன்மைகள் ஏற்படும். எந்த ராசிகளுக்கு என்ன மாற்றங்கள் நடக்கப்போகின்றன என்பதை பார்ப்போம்.***

**மேஷம்:**

கடின உழைப்புக்கு மகத்தான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம் காணலாம் கூடுதலாக பணம் சம்பாதிக்க வாய்ப்பு. தொழிலில் சிறந்த வெற்றியை அடையும்.

மேலும் வேலை தேடுவோருக்கு புதிய வேலை கிடைக்கும். குடும்ப உறவுகள் மேம்படும், பயண வாய்ப்புகள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும், கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும்.

**சிம்மம்:**

மாத தொடக்கத்தில் பதவி உயர்வு அல்லது வேலை மாறும் வாய்ப்பு. அரசியலில் இருப்பவர்கள் முக்கிய பதவி அடைய வாய்ப்பு. தொழில் செய்பவர்கள் நல்ல லாபம் காணலாம், மாணவர்கள் போட்டிகளில் வெற்றி பெறுவார்கள்.

திருமணமானவர்களுக்கு தாம்பத்ய வாழ்க்கை சிறக்கும், திருமணமாகதவர்களுக்கு விரைவில் திருமணத்தை சந்திப்பார்கள். வயிற்றுப் பிரச்சனைகளை தவிர்க்க சரியான உணவுமுறை பின்பற்ற வேண்டும்.

**துலாம்:**

நண்பர்களின் உதவியுடன் வேலை திட்டங்கள் நிறைவேறும். தொழிலில் சிறப்பான வளர்ச்சி காணலாம்; புதிய தொழில் தொடங்க இது நல்ல நேரம். மாணவர்கள் முக்கியமான தேர்வுகளில் வெற்றி பெறுவார்கள். திருமணமானவர்களுக்கு உறவு மேலும் சிறக்க வாய்ப்பு. பொருளாதார நன்மைகள் மற்றும் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி.

**மீனம்:**

கனவுகளை நிறைவேற்ற உங்கள் அனைவரின் உதவியும் கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் அசாதாரண வளர்ச்சி காணலாம். பெரிய தேர்வுகள் எழுதும் மாணவர்களுக்கு சிறந்த வெற்றி கிடைக்கும். தாம்பத்ய வாழ்வில் மகிழ்ச்சி அதிகரிக்கும், உடல் ஆரோக்கியம் மேம்படும்.

## மேஷ ராசி அன்பர்களே!




இந்த மாதம் எதிலும் வெற்றியே ஏற்படும். எதிரிகள் பணிந்து போவர். அவர்களால் மறைமுக ஆதாயமும் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கித்தில் கவனம் தேவை. அரசாங்கக் காரியங்கள் தாமத மாகவே முடியும். வழக்குகளால் மனதில் ஓர் அச்ச உணர்வு ஏற்படக்கூடும். மாதப் பிற்பகுதியில் சகோதரர்களுடன் சிறுசிறு கருத்துவேறுபாடு ஏற்பட்டு சரியாகும். திருமண முயற்சிகள் கைக்கூடும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கையாக இருக்கவும்.

உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும் என்றாலும், சக ஊழியர்களின் ஒத்துழைப்பால், அதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகச் சூழ்நிலை உற்சாகம் தரும்.

வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: முருகன்.
ஸ்லோகம்: கந்த சஷ்டி கவசம்.
பரிகாரம்: சனி பகவானுக்கு அர்ச்சனை செய்வது, மகாலெட்சுமிக்கு நெய் தீபம் ஏற்றுவது.
சந்த்ராஷ்டமம்: மார்கழி 2–ம் தேதி 17/12/25 புதன்கிழமை பகல் 12.26 மணி முதல் மார்கழி 4–ம் தேதி 19/12/25 வெள்ளிக்கிழமை இரவு 12.06 மணி வரை.

## ரிஷப ராசி அன்பர்களே!




இந்த மாதம் மாதத்தின் பிற்பகுதியில் இருந்து காரியங்களில் அனுகூலம் உண்டாகும். முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முன்னேற்றத்துக்குத் தடை இருக்காது. மாதத்தின் பிற்பகுதியில் குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் உண்டாகும். பிள்ளைகள் வகையில் பெருமை சேரும். உறவினர்கள் வருகையும், அவர்களால் உதவிகளும் உண்டு. நண்பர்கள் வகையில் பிரச்னைகளும் ஏற்படலாம் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள்.

உயர் அதிகாரிகளுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அவர் கோபத்தில் எதுவும் கூறினாலும், மௌனமாக இருப்பது பிற்காலத்துக்கு நல்லது. வியாபாரத்தை முன்னிட்டு வெளியூர்ப் பயணங்கள் மேற்கொள்ள நேரிடும். புதிய முயற்சிகளை இந்த மாதத்தில் மேற்கொள்ளவேண்டாம். அரசாங்கக் காரியங்கள் தாமதமாக முடியும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது. மாதப் பிற்பகுதியில் அக்கம்பக்கத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு மனதுக்கு உற்சாகம் தரும்.

வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: வெங்கடாசலபதி.
ஸ்லோகம்: விஷ்ணுசஹஸ்ரநாமம்.
பரிகாரம்: ஆஞ்சநேயருக்கு துளசி அர்ச்சனை செய்வது.
சந்த்ராஷ்டமம் : மார்கழி 4–ம் தேதி 19/12/25 வெள்ளிக் கிழமை இரவு 12.07 மணி முதல் மார்கழி 7–ம் தேதி 22/12/25 திங்கள்க்கிழமை காலை 10.32 மணி வரை.

## மிதுன ராசி அன்பர்களே!




இந்த மாதம் குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் காணப்படும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். உறவினர்களும் நண்பர்களும் மிகவும் உதவியாக இருப்பார்கள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மாதப் பிற்பகுதியில் உறவினர்கள் வகையில் சிறுசிறு பிரச்னைகள் ஏற்பட சாத்தியம் உள்ளதால், பொறுமையுடன் இருப்பது மிகவும் அவசியம். விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு உண்டு. மாதத்தின் பிற்பகுதியில் எதிரிகளால் பிரச்னைகளும், கடன் தொல்லைகளும் ஏற்படக்கூடும். ஆனாலும், குரு பலத்தால் சமாளித்துவிடுவீர்கள். அலுவலகத் தில் செல்வாக்கு அதிகரிக்கும். பதவிஉயர்வு, சம்பள உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கும். குடும் பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உறவினர் களிடையே மதிப்பு மரியாதை அதிகரிக்கும். பணிக்குச் செல்லும் பெண்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: துர்க்கை.
ஸ்லோகம்: அனுமன் சாலீசா பாராயணம்.
பரிகாரம்: செவ்வாய்க்கிழமை நெய்தீபம் ஏற்றுவது.
சந்த்ராஷ்டமம்: மார்கழி 7–ம் தேதி 22/12/25 திங்கள்கிழமை காலை 10.33 மணி முதல் மார்கழி 9–ம் தேதி 24/12/25 புதன்கிழமை மாலை 6.38 மணி வரை.

## கடக ராசி அன்பர்களே!




இந்த மாதம் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். நண்பர்களும் அனுகூலமாக இருப்பார்கள். தெய்வ பக்தி அதிகரிக்கும். எடுத்த செயலை வெற்றிகரமாக முடிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். சிலருக்கு புதிய வீடு, வாகனம் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். மாதப் பிற்பகுதியில் குடும்பப் பெரியவர்களால் நன்மைகள் நடக்கும். தாயாருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். அவருடைய உடல் ஆரோக்கியமும் சிறிய அளவில் பாதிக்கப்பட்டு, உடனே சரியாகிவிடும். அலுவலகத்தில் அதிக பணிச்சுமை ஏற்படுவதால், மனதில் சோர்வும், உடல் அசதியும் உண்டாகும்.மாதப் பிற்பகுதியில் கொடுக்கல் – வாங்கல் விஷயத்தில் எச்சரிக்கை அவசியம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உறவினர்கள் மத்தியில் மதிப்பு மரியாதை கூடும். சிலருக்கு வெளியூர் புண்ணிய தலங் களுக்குச் செல்லும் வாய்ப்பு உண்டாகும். அலுவலகத் துக்குச் செல்லும் பெண்களுக்கு சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: மகா விஷ்ணு.
ஸ்லோகம்: விஷ்ணுசகஸ்ரநாமம் பாராயணம்.
பரிகாரம்: தட்சிணாமூர்த்திக்கு நெய்தீபம் ஏற்றுவது.
சந்த்ராஷ்டமம்: மார்கழி 9–ம் தேதி 24/12/25 புதன் கிழமை மாலை 6.39 மணி முதல் மார்கழி 11–ம் தேதி 26/12/25 வெள்ளிக்கிழமை இரவு 12.20மணி வரை.

### சிம்ம ராசி அன்பர்களே!




இந்த மாதம் பணவரவு கணிசமாக உயரும். புதிய ஆடை, ஆபரணங்கள் சேரும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதையும் சாதிக்க வேண்டும் என்ற மன உறுதி ஏற்படும். பழைய வாகனத்தை மாற்றிவிட்டு, புதிய வாகனம் வாங்குவீர்கள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் ஏற்படும். பிரிந்திருந்த தம்பதி ஒன்று சேருவார்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். உறவினர்களால் உதவி கிடைக்கும் அதே நேரத்தில் மாதப் பிற்பகுதியில் அவர்களால் சிறு உபத்திரவமும் ஏற்படலாம். உறவினர்கள் வகையில் சற்று பக்குவமாக நடந்துகொள்வது நல்லது. வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பல வகைகளிலும் முன்னேற்றம் தரும் மாதமாக இருக்கும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு சிறப்பான பலன்கள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கக்கூடும்.

வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: ஆஞ்சநேயர்.
ஸ்லோகம்: சிவஸ்துதிகள் பாராயணம்.
பரிகாரம்: ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை.
சந்த்ராஷ்டமம்: மார்கழி 11–ம் தேதி 26/12/25 வெள்ளிக்கிழமை இரவு 12.21 மணி முதல் மார்கழி 14–ம் தேதி 29/12/25 திங்கள்கிழமை அதிகாலை 4.06 மணி வரை

### கன்னி ராசி அன்பர்களே!




இந்த மாதம் மிகவும் மகிழ்ச்சியும் பல வகைகளிலும் வளர்ச்சியும் தரும் மாதமாக அமையும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். புதிய முயற்சிகள் அனைத்துமே மிக எளிதாக வெற்றி அடையும். சுபநிகழ்ச்சிகளை திட்டமிட்டபடியே நடத்தி முடிப்பீர்கள். உறவினர் மற்றும் நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்வீர்கள். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படு வதற்கான திருப்புமுனை மாதமாக இந்த மாதம் அமையும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உயர் அதிகாரிகள் உங்கள் ஆலோசனைகளுக்கு உரிய அங்கீகாரம் கொடுப்பார்கள். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் வெற்றி பெறும். மாதப் பிற்பகுதியில் சக வியாபாரிகளால் மறைமுகப் போட்டிகள் ஏற்படக்கூடும். பற்று வரவில் கவனம் தேவை. குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் மாதம். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். விசேஷங்களில் கலந்துகொள்வீர்கள்.

வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: விநாயகர்.
ஸ்லோகம்: கந்த சஷ்டி கவசம் பாராயணம்.
பரிகாரம்: சிவ பெருமானுக்கு நெய்தீபம்.
சந்த்ராஷ்டமம்: மார்கழி 14–ம் தேதி 29/12/25 திங்கள்கிழமை அதிகாலை 4.07 மணி முதல் மார்கழி 16–ம் தேதி 31/12/25 புதன்கிழமை காலை 6.43 மணி வரை.

### துலா ராசி அன்பர்களே!




இந்த மாதம் அனைத்து விஷயங்களிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. குடும்பத்தில் சிற்சில பிரச்னைகள் ஏற்பட்டு மனஅமைதியை பாதிக்கக்கூடும். கூடுமானவரை மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளை அவர்கள் போக்கிலேயே விட்டுப்பிடிப்பது நல்லது. அரசாங்க விவகாரங்கள் சாதகமாக முடியும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். எந்த ஒரு வேலையையும் சற்று கஷ்டப்பட்டுத்தான் முடிக்கவேண்டி இருக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதலாக உழைக்க வேண்டும். ஆனால், அதற்கேற்ற ஆதாயம் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை. பங்குதாரர்களால் வியாபாரத்தில் லாபம் கூடுதலாகக் கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் மாதமாகவே இருக்கும். குடும்பப் பொறுப்பு களை நிறைவேற்றுவதில் சிரமம் எதுவும் இருக்காது.

வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: விநாயகர்.
ஸ்லோகம்: விநாயகர் அகவல்.
பரிகாரம்: விநாயகருக்கு அறுகம்புல்.
சந்த்ராஷ்டமம்: மார்கழி 16–ம் தேதி 31/12/25 புதன்கிழமை காலை 6.44 மணி முதல் மார்கழி 18–ம்தேதி 02/01/26 வெள்ளிக்கிழமை காலை 9.03 மணி வரை.

### விருச்சிக ராசி அன்பர்களே!




இந்த மாதம் அனைத்து காரியங்களிலும் வெற்றி உண்டாகும். பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகமும் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளும் ஏற்படக்கூடும். தெய்வ பக்தியும் ஆன்மிகத்தில் நாட்டமும் அதிகரிக்கும். புண்ணியத் தலங்க ளுக்குச் சென்று வரும் வாய்ப்பும் ஏற்படும். பெண்களால் பொருள் சேர்க்கை உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே சிறுசிறு அளவில் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால், ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. நண்பர்களால் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படக்கூடும். முக்கியப் பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் உண்டாகும். அலுவலகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கும். ஆனாலும், பணிச்சுமை அதிகரிக்கவே செய்யும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பத்தை நிர்வகிப்பதில் சற்று சிரமம் இருக்கவே செய்யும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு வேலைச்சுமை கூடுதலாக இருக்கும்.

வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்; ஆஞ்சநேயர்.
ஸ்லோகம்: அனுமனுக்கு அர்ச்சனை செய்வது.
பரிகாரம்: குருபகவானுக்கு அர்ச்சனை செய்வது.
சந்த்ராஷ்டமம்: கார்த்திகை 19–ம் தேதி 05/12/25 வெள்ளிக்கிழமை இரவு 12.49 மணி முதல் கார்த்திகை 22–ம் தேதி 08/12/25 திங்கள்கிழமை அதிகாலை 3.55 மணி வரை

## தனுசு ராசி அன்பர்களே!




இந்த மாதம் பணப்புழக்கம் கணிசமாக அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றத்துக்கான வழிவகைகள் பிறக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். பிரிந்திருந்த கணவன் – மனைவி ஒன்று சேருவீர்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். மாதப் பிற்பகுதியில் உறவினர்களால் குடும் பத்தில் பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்பதால், உறவினர் களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும். அலுவலகத்தில் உயர் அதிகாரிகளிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சக ஊழியர்களிடமும் போதுமான ஒத்துழைப்பை எதிர் பார்க்க முடியாது. மாதப் பிற்பகுதியில் ஓரளவு அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம். தொழில் மற்றும் வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்ததை விடவும் குறைவாகவே கிடைக்கும். மறைமுக எதிரிக ளால் பிரச்னைகள் ஏற்படக்கூடும். குடும்ப உறுப்பினர் கள் உங்கள் ஆலோசனைகளுக்கு மதிப்பு தருவார் கள்.

வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: தட்சிணாமூர்த்தி.
ஸ்லோகம்: குரு அஷ்டகம் சொல்லுதல் நல்லது.
பரிகாரம்: விநாயகருக்கு தேங்காய் எண்ணெய் தீபம்.
சந்த்ராஷ்டமம் : கார்த்திகை 22–ம் தேதி 08/12/25 அதிகாலை 3.56 மணி முதல் கார்த்திகை 24–ம் தேதி 10/12/25 காலை 8.42 மணி வரை.

## மகர ராசி அன்பர்களே!




இந்த மாதம் வெளிவட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பணவரவு கணிசமாக உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிலவும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையும், அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும். வீட்டில் பொருள்கள் களவு போகக்கூடும் என்பதால், எச்சரிக்கையாக இருக்கவும். அலுவலகத்தில் சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் ஒத்துழைப்பு தருவார்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். அரசாங்கத்திடம் எதிர்பார்த்த லைசென்ஸ் போன்ற விஷயங்கள் எளிதாக முடியும். வியாபா ரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் இருந்தால், அதற் கான முயற்சிகளில் ஈடுபடலாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மாதத்தின் பெரும்பகுதி மகிழ்ச்சி தருவதாக இருக்கும். கணவரிடம் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகும்.

வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: பைரவர்.
ஸ்லோகம் : பைரவர் அஷ்டகம்.
பரிகாரம்: பைரவருக்கு நெய் தீபம் ஏற்றுவது.
சந்த்ராஷ்டமம்: கார்த்திகை 24–ம் தேதி 10/12/25 புதன்கிழமை காலை 8.43 மணி முதல் கார்த்திகை 26–ம் தேதி 12/12/25 மாலை 3.41 மணி வரை.

## கும்ப ராசி அன்பர்களே!




இந்த மாதம் வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை நல்லபடியே இருக்கும். பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பத்தில் வசதி வாய்ப்புகள் பெருகும். வீட்டில் மகிழ்ச்சியும் நிம்மதியும் குடிகொள்ளும். பெண்களால் நன்மை உண்டாகும். புதிய ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். பெண்களால் நன்மை உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாக இருந்தாலும் சாதகமாக முடியும். பூர்விகச் சொத்துப் பிரச்னையில் பொறுமையைக் கடைப் பிடிக்கவும். சிலருக்கு தடைப்பட்ட திருமணம் கூடி வரும். அலுவலகத்தில் உற்சாகமாக செயல்படுவீர்கள். சக ஊழியர்களிடையே உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் லாபம் அதிகமாகக் கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் மாதமாக இருக்கும். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைகள் மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். உறவினர்களும் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் அனுகூலம் உண்டாகும்.

வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: முருகன்.
ஸ்லோகம்: தினமும் கந்த சஷ்டி கவசம் பாராயணம்.
பரிகாரம்: ராகுகாலத்தில் துர்க்கைக்கு நெய் தீபம்.
சந்த்ராஷ்டமம் : கார்த்திகை 26–ம் தேதி 12/12/25 வெள்ளிக்கிழமை மாலை 3.42 மணி முதல் கார்த்திகை 28–ம் தேதி 14/12/25 ஞாயிற்றுக்கிழமை இரவு 1.07 மணி வரை.

## மீன ராசி அன்பர்களே !




இந்த மாதம் பொறுமையுடன் இருக்கவேண்டிய மாதம். எந்த ஒரு காரியமும் ஒருமுறைக்குப் பலமுறை முயற்சி செய்த பிறகே முடியும். எதிலும் தடை தாமதங்கள் இருக்கவே செய்யும். வீண் விவாதங் களில் ஈடுபடவேண்டாம். மாதப் பிற்பகுதியில் மேற்கண்ட வகைகளில் நல்ல மாற்றங்களை எதிர்பார்க்கலாம். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியங்கள் முடிவதில் தடை, தாமதம் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது எதிர்காலத்துக்கு நல்லது.
தொழில் மற்றும் வியாபாரத்தில் எவ்வளவுக்கு எவ்வளவு உழைக்கிறீர்களோ அவ்வளவுக்கு லாபம் கிடைக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். மறைமுகப் போட்டிகளை முறியடிப் பீர்கள். சக வியாபாரிகளுடன் இணக்கமாகப் பழகுவது நல்லது. குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சற்று சிரமம் தரும் மாதமாக இருக்கும். ஆனாலும், பெரிய அளவில் பாதிப்பு எதுவும் இருக்காது. அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: சூரியன்.
ஸ்லோகம்: ஆதித்ய ஹ்ருதயம் பாராயணம்.
பரிகாரம்: சூரியனுக்கு செம்பருத்திமாலை.
சந்த்ராஷ்டமம்: கார்த்திகை 28–ம் தேதி 14/12/25 ஞாயிற்றுக்கிழமை இரவு 1.08 மணி மார்கழி 2–ம் தேதி 17/12/25 பகல் 12.25 மணி வரை.

# கடைக் கடனை தீர்த்த பட்டினத்தார்

பட்டினத்தார் இடுகாட்டில் தன் தாய்க்கு ஈமச்சடங்கு செய்தபோது பாடிய பத்து பாடல்களும் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. பட்டினத்தடிகள் துறவியாக ஊர் ஊராகத் திரிந்து கொண்டிருந்த காலத்தில் அவருடைய அன்னையார் மரணமடைந்தார். "அவருடைய ஈமச்சடங்கை நான் எங்கிருந்தாலும் வந்து செய்து தருவேன்" என்று வாக்களித்திருந்தபடி பட்டினத்தடிகள் சரியான நேரத்தில் சுடுகாட்டிற்கு வந்து சேர்ந்தார்.

அவருடைய தாயின் சிதைக்காக உறவினர்கள் அடுக்கியிருந்த காய்ந்த விறகுகளை அகற்றிவிட்டு பச்சை வாழை மட்டைகளையும் இலைகளையும் கொண்டு சிதையடுக்கி, "ஐயிரண்டு திங்களாய் அங்கமெலா நொந்து பெற்று" என்று பாடத் தொடங்கி, தம் தாயாரை தீயுண்ணச் செய்து தம் கடைக் கடனைக் கழித்தார்.



**பட்டினத்தால் இடுகாட்டில் பாடிய 10 பாடல்கள்:**

*ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்*
*பையலென்ற போதே பரிந்தெடுத்துச் – செய்ய இரு*
*கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை*
*எப்பிறப்பில் காண்பேன் இனி?*

*முந்தித்தவம் கிடந்து முந்நூறு நாள் அளவும்*
*அந்திபகலாச் சிவனை ஆதரித்துத் – தொந்தி*
*சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ*
*எரியத் தழல் மூட்டுவேன்?*

*வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும், தோள்மேலும்*
*கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து – முட்டச்*
*சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ*
*விறகிலிட்டுத் தீமூட்டுவேன்?*

*நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை*
*தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே – அந்தி பகல்*
*கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய் தனக்கோ*
*மெய்யிலே தீமூட்டுவேன்?*

*அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு*
*வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் – உருசியுள்ள*
*தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ*
*மானே என அழைத்த வாய்க்கு?*

*அள்ளி இடுவது அரிசியோ? தாய் தலைமேல்*
*கொள்ளிதனை வைப்பேனோ? கூசாமல் மெள்ள*
*முகம்மேல் முகம்வைத்து முத்தாடி "என்றன்*
*மகனே" என அழைத்த வாய்க்கு?*

*முன்னை இட்ட தீ முப்புரத்திலே;*
*பின்னை இட்ட தீ தென் இலங்கையில்;*
*அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே*
*யானும் இட்ட தீ மூள்க! மூள்கவே!*

*வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்*
*ஆகுதே பாவியேன் ஐயகோ! – மாகக்*
*குருவிபறவாமல் கோதாட்டி என்னைக்*
*கருதி வளர்த்தெடுத்த கை.*

*வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்*
*வந்தாளோ! என்னை மறந்தாளோ – சந்ததமும்*
*உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்துஎன்*
*தன்னையே ஈன்றெடுத்த தாய்?*

*வீற்றிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்!*
*நேற்றிருந்தாள்; இன்று வெந்து நீறானாள்; – பால்தெளிக்க*
*எல்லோரும் வாருங்கள்! ஏதென்று இரங்காமல்*
*எல்லாம் சிவமயமே யாம்!*

துறவியே ஆகிப் போனாலும் ஒவ்வொரு ஆண்மகனும் தம் தாய், தந்தையருக்கு செய்யும் கடமைகளை மறவாது நிறைவேற்றி முன்னோர்கள், ஞானிகள், சித்தர்கள் ஆசிகளை பெற்றுய்வோம்.



# நேஷனல் ஹெரால்டு வழக்கில்
# சோனியா, ராகுல் மீது புதிய வழக்கு பதிவு

நேஷனல் ஹெரால்டு சொத்துகளை முறைகேடாக கைப்பற்றிய வழக்கில் காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள் சோனியா, ராகுல் காந்தி மீது டெல்லி போலீஸார் புதிய வழக்கு பதிவு செய்துள்ளனர்.முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவால் தொடங்கப்பட்ட நேஷனல் ஹெரால்டு பத்திரிகை நஷ்டம் காரணமாக 2008–ல் மூடப்பட்டது. இந்த பத்திரிகையை நடத்திய அசோசியேட்டட் ஜர்னல்ஸ் (ஏஜேஎல்) நிறுவனத்துக்கு ரூ.2 ஆயிரம் கோடி சொத்து இருக்கிறது.

இந்நிலையில், 2010–ம் ஆண்டு புதிதாக தொடங்கப்பட்ட யங் இந்தியன் நிறுவனம், அசோசியேட்டட் ஜர்னல்ஸ் நிறுவனத்தின் கடனை அடைத்துவிட்டு அதை கையகப்படுத்தியது. யங் இந்தியன் நிறுவனத்தில் காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள் சோனியா மற்றும் ராகுல் காந்திக்கு 76% பங்குகள் உள்ளது தெரியவந்தது. இதையடுத்து, இந்த பரிவர்த்தனை சட்டவிரோதமானது என புகார் எழுந்ததால், இது தொடர்பாக சிபிஐ மற்றும் அமலாக்கத் துறை தனித்தனியாக வழக்கு பதிவு செய்தன. இந்த வழக்கை டெல்லியிலுள்ள சிறப்பு நீதிமன்றம் விசாரித்து வருகிறது.

இந்நிலையில், அமலாக்கத் துறை கொடுத்த புகாரின் பேரில், டெல்லி காவல் துறையின் பொருளாதார குற்றப்பிரிவு புதிதாக ஒரு முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளது. இதில் காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் காங்கிரஸ் கட்சியின் வெளிநாட்டு பிரிவு தலைவர் சாம் பிட்ரோடா உள்ளிட்ட 3 பேர், ஏஜேஎல், யங் இந்தியன் மற்றும் டோடெக்ஸ் மெர்ச்சண்டைஸ் ஆகிய நிறுவனங்களின் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளன. இதையடுத்து, ஏஜெஎல் பங்குதாரர்களுக்கு சம்மன் அனுப்பப்படும் என கூறப்படுகிறது. அவர்களிடம், ஏஜேஎல் நிறுவனத்தை யங் இந்தியன் நிறுவனத்துக்கு மாற்ற ஒப்புதல் பெறப்பட்டதா என்ற கோணத்தில் விசாரிக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த வழக்கை தொடர்ந்து, இதுவரை உச்சநீதிமன்றத்தில் இருந்து வந்த விஐபிக்களுக்கான நடைமுறைகள் தற்போது தலைமை நீதிபதியாக பதவியேற்ற நீதிபதி திரு. சூர்யகாந்த் அவர்களால் நீக்கப்பட்டுள்ளது. (நீதிக்குமுன் அனைவரும் சமம் ).

இதனால் எந்த, சீனியர் வழக்கறிஞரும் எனது வழக்கு முன்னால் வரணுமென குதிக்க முடியாது. எந்த குறுக்கு வழியும் இனி கிடையாது. எந்த வழக்கும் முக்கியமென கருதினால் அது முன்னுரிமைக்காக முறைப்படி எழுத்து மூலமே சமர்ப்பிக்கப்படணும். நீதிமன்றத்தில் கத்துவதன் மூலம் சாதிக்கமுடியாது. உச்ச நீதிமன்றத்தால் கொலீஜியம் முறை நீக்கப்பட்டுள்ளது. இதனால் நீதிபதிகள் நியமனம் மற்றும் மாறுதல்கள் வெளிப்படைதன்மையோடு இருக்கும்.

நீதிதுறை சீரமைக்கப்பட்டால்தான் பல வழக்குகளில் நியாயமான தீர்ப்பை எதிர்பார்க்க முடியும். தற்போது திரும்பவும் சோனியா ராகுல் மேல் அமலாக்கத்துறை பதிவு செய்துள்ள வழக்கு சரியான பாதையில் செல்லுமென நம்பலாம்.

# காசி தமிழ்ச் சங்கமம் 4.0




வரலாற்றுப் பெருநிகழ்வாய் காசி தமிழ்ச் சங்கமம் 4.0 நிகழ்ச்சியில் கலந்து கொண்டதில் மிகுந்த மகிழ்ச்சி என மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தனது சமூக வலைதள பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும், பல்வேறு மொழிகளும் கலாச்சாரமும் கொண்ட பாரம்பரியமிக்க நமது பாரத தேசத்தில், வெவ்வேறு நிலப்பரப்புகளையும் மனிதர்களையும் ஒன்றிணைத்து தேசத்தின் ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் விதமாக, பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களின் வழிகாட்டுதலில் ஆண்டுதோறும் இந்நிகழ்வு நடைபெற்று வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

தேசத்தின் வெவ்வேறு மொழி பேசும் அனைத்து இந்தியர்களும், தமிழ் மொழியைக் கற்றறிந்து, அதன் வரலாற்றுச் சிறப்புகளை உணர்ந்திடும் வகையில், ‘தமிழ்கற்கலாம்’ என்கிற கருத்தியலோடு இவ்வாண்டு இந்நிகழ்ச்சி நடைபெற்றது தமிழர்கள் அனைவரையும் பெருமைப்படுத்துகின்றது.

மேலும் இந்த சங்கமத்தின் வாயிலாக, ‘ஒரே பாரதம், உன்னத பாரதம்’ என்கிற உயரிய கொள்கையும் தொடர்ந்து நிலை நிறுத்தப் படுகிறது.

உத்திரப்பிரதேச மாநிலம் வாரணசியில்,



உத்திரப்பிரதேச மாநில முதல்வர் திரு.ஆதித்யநாத் யோகி அவர்கள் மற்றும் மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதாப் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இத்தகைய சிறப்பு கொண்ட விழாவில், தமிழக ஆளுநகர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள், புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு.கைலாஷ்நாதன் அவர்கள், உத்திரப்பிரதேச மாநில துணை முதலமைச்சர் திரு.பிரஜேஸ் பதக் அவர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான தமிழக, உத்திரப்பிரதேச மாநிலங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர் என பதிவிட்டுள்ளார்.



# மேல்மலையனூர் கோயில் உற்சவத்தில் கிடைத்த நகையை ஒப்படைத்த காவலர்கள்



## SP திரு.ப.சரவணன் IPS அவர்கள் பாராட்டு

மேல்மலையனூர் அங்காளம்மன் கோவில் ஊஞ்சல் உற்சவத்தின் போது தவறவிட்ட எட்டு சவரன் நகை பாதுகாப்பு பணியில் இருந்த இரண்டு காவலர்களின் கையில் கிடைத்த நகை உரியவரிடம் காவலர்கள் மூலமாகவே ஒப்படைக்கப் பட்டது. நகையின் உரிமையாளர் கண்ணீர் மல்க காவல் துறையினருக்கு நன்றி தெரிவித்த நிகழ்வு பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

SP திரு.ப.சரவணன் IPS அவர்களின் அறிவுறுத்துதலின்படி, செஞ்சி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ரமேஷ் ராஜ் அவர்களின் மேற்பார்வையில், கடந்த 19.11.2025–ம் தேதி அன்று மேல்மலையனூர் அங்காளம்மன் கோவில் கார்த்திகை மாத ஊஞ்சல் உற்சவத்தின் போது பல்லாயிரக்கணக்கிலான மக்கள் சாமி தரிசனம் செய்தனர்.

அன்று கோவில் பாதுகாப்பு பணியில் இருந்த தமிழ்நாடு சிறப்பு காவல் படை 10–ம் அணியை சேர்ந்த காவலர்கள் திரு.சதீஷ், திரு.தர்மதுரை ஆகியோர் 8 பவுன் தங்க நகையை கீழே கிடந்து எடுத்து, மேல்மலையனூர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி.வினதா அவர்களிடம் நேர்மையுடன் ஒப்படைத்தனர்.

இதனை தொடர்ந்து நகையின் உரிமையாளர் அதன் அடையாளங்களை தெரிவித்து வாங்கி செல்லுமாறு கொடுத்த பத்திரிகை செய்தியின் மூலம் திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் பக்கிரி பாளையம் கிராமத்தைச் சேர்ந்த முனியாண்டி என்பவரின் மனைவி ஷகிலா(50) அதன் அடையாளங்களை சரியாக கூறியதன் பேரில் 8 பவுன் தங்க நகைகளை உட் கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் 2 காவலர்கள் மூலம் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

SP திரு.ப.சரவணன் IPS அவர்கள் நகையை ஒப்படைத்த காவலர்கள் திரு.சதீஷ், திரு.தர்மதுரை ஆகியோரை நேரில் அழைத்து பாராட்டினார்.

நிருபர்: **R.ராமநாதன்** விழுப்புரம்



ஓம் காளி ஓம் நமசிவாய



கருடசித்தர்
Dr.பாலகிருஷ்ண சுவாமி
எரசை, தேனி மாவட்டம்.

# முனீஸ்வரன் வழிபாட்டு ரகசியங்கள்



நம்முடைய அகண்ட பாரத தேசம் ஒரு தெய்வீக தேசமாகும். நம் பாரத தேசம் பலவிதமான தெய்வீகக் கலாச்சாரத்தைக் கொண்டதாகும். ஆயற் கலைகள் அறுபத்து நாலும் (64) நம் பாரத மண்ணில் தோன்றி யதாகும்.

நம் பாரத தேசத்தில் பெரும் வழிபாடு ஆறு வழிபாடு களைக் கொண்டது. அது சிவ வழிபாடு, விஷ்ணு வழி பாடு, முருக வழிபாடு, கணபதி வழிபாடு, சக்தி வழிபாடு, சூரிய வழிபாடு என்ற ஆறு பிரிவுகள் நம் பாரத தேசத்தில் வெளிப்படையான முதன்மையான வழிபாடுகள் ஆகும்.

இந்த ஆறு வழிபாட்டுப் பிரிவுகளுக்குள் அடங்கிய அம்சமாக குல தெய்வ வழிபாடு உள்ளது. இந்தக் குல தெய்வங்கள் இலட்சக்கணக்காக உள்ளது. நம் பாரத தேசத்து மக்கள் வெளிப்படையான முதன்மையான வழி பாடுகள் ஆகும்.

நம் பாரத தேசத்து மக்கள் அனைவருக்கும் குல தெய்வ வழிபாடு உள்ளது. அனைத்து குல தெய்வங்களும் இந்த ஆறு வழிபாட்டுத் தெய்வங்களின் அவதாரமாகவும், அம்சமா கவும் வரும். எந்த சாதியாக இருந்தாலும் எந்த இனமாக இருந்தாலும், எந்த மொழியாக இருந்தாலும் குல தெய்வம் எல்லோருக்கும் பொதுவாக வரும்.

### குல தெய்வம்

ஒவ்வொருவரின் குலத்தை காக்கக் கூடிய தெய்வம் குல தெய்வமாகும். அந்த வகையில் காவல் தெய்வமாகவும், நீதியின் தெய்வமாகவும் பல கோடிக்கணக்கான மக்களுக்கு முனீஸ்வரன் குல தெய்வமாக விளங்குகின்றார்.

### முனீஸ்வரன் வழிபாட்டு முறைகள்

முனீஸ்வரன் என்பது முனிவர்க்கெல்லாம் ஈஸ்வரனாக இருந்து ஞானத்தை வழங்கியவன். முனி என்பது முதன்மை என்று பொருள். நீதியை நிலை நாட்டும் தெய்வமாகப்

போர்றப்படுகின்றார்.

முனீஸ்வரனுக்கு இடத்துக்கும், சூழ்நிலைக்கும் செயலுக்கும் ஊருக்கும் ஏற்றவாது முனீஸ்வரனுடைய பட்டம் மாறும். ஆனாலும், முனீஸ்வரன் ஒன்றே.

முனீஸ்வரன் சிவனுடைய காவல் தெய்வங்களில் ஒருவராக கருதப்படுகின்றார்.

### ஈஸ்வர பட்டம்

சிவபெருமானுக்கு அடுத்து நிலையில் சிவனுடைய ஈஸ்வர பட்டம் இரண்டு பேருக்கு கிடைத்திருக்கின்றது. கர்மத்திற்கு ஏற்ப பலனளிக்கும் சனீஸ்வரனுக்கும் காவல் தெய்வமாக விளங்கும் முனீஸ்வரருக்கும் கிடைத்திருக்கிறது.

அந்தகாசுரன் போன்ற அசுர சக்திகளையும் தீய சக்திகளையும் துஷ்ட சைத்தான்களையும் பேய்களையும் கொல்லிவாய் பிசாசுகளையும் அழிக்க வந்த வீர தெய்வமாக முனீஸ்வரன் பூமியில் இறங்கி வந்தார்.

பராசக்தியின் அருள் பெற்றவராக முனீஸ்வரன் விளங்குகின்றார். பார்வதி தேவியின் அம்சமான காத்தாயி அம்மனின் முழு அருள் பெற்றவராக முனீஸ்வரன் விளங்குகின்றார். முனி என்ற சொல் ரிக் வேதத்தில் தெய்வ ஆவேசம் படைத்தவர் என்றும் பயம் இல்லாதவர் என்றும் பொருள்படும்.

கிராமத்தில் காவல் தெய்வங்களாக கருப்பசாமி, ஐய்யனார் விளங்குவது போல, முனீஸ்வரனும் கிராம காவல் தெய்வமாக போற்றப்படுகின்றார். முனி என்றால் நீதிக்காக கோபம் கொண்டு அநீதியை அழிப்பவர் என்று பொருள்படும். சிவபெருமானின் அம்சமாக போற்றப் படுகிறார்.

கலியுகத்தில் அதர்மத்தை அழித்து நீதியைக் காக்கும் தெய்வமாக காட்சி தருகின்றார்.

### முனீஸ்வரன் வடிவம்

முனீஸ்வரன் வெண்மை நிறத்தில் முட்டைக் கண்களுடனும், முறுக்கு மீசையுடனும் கையில் சூலும், அரிவாள், வேல் கத்தி போன்ற ஆயுதங்களுடனும் கம்பீரமாக உயரமான வடிவமாக காட்சி தருவார். பத்கர்களுக்கு வெண் புகை வடிவில் காட்சி தருவார். ஆலமரத்தில் அடங்கி இருப்பார்.

முனீஸ்வரன் பத்கர்களுக்கு சடை முடியோடு காட்சி தருவார். ஆலமரத்தடியில் முனீஸ்வரர் பூசை செய்யும் போது சுழல் காற்றோடு ஆவேசமாக வந்து ஆலமரத்தின் விழுதுகளை

## முனீஸ்வரர் இயந்திரம்




ஆட்டி அசைத்து மக்களை காற்றின் மூலமாக ஆசிர்வாதம் செய்வார்.

### பஞ்ச முனிகள்

வாழ் முனி, செம்முனி, கருமுனி, முத்துமுனி, வேதமுனி, பூ முனி போன்ற ஐந்து முனிகளை பஞ்ச முனி என்று அழைக்கின்றோம்.

வாழ்முனி, செம்முனி, முத்துமுனி, ஜடாமுனி, பாலக்காட்டு முனி, வேதமுனி, இலாட முனி என்று ஏழு முனிகளையும் வணங்குவார்கள். அதர்மத்தை அழிப்பதற்கும், நீதிக்காகவும் கோப்படும் சித்தர்களை முதன்மையானச் சித்தர்களாகவும், முனி பட்டம் முதன்மையானச் சித்தர்களாகவும் முனி பட்டம் பெற்ற சித்தர்களாகவும் அழைக்கப்பட்டார்கள். அவர்களில் மச்சமுனி, பிருகுமுனி, சட்டைமுனி, கும்ப முனி, கமல முனி என்று முனிப் பட்டம் பெற்ற சித்தர்கள் ஆவார்கள்.

முனி என்றால் அதர்மத்தை அழிப்பதற்காக கோபம் கொண்டவர் என்று அர்த்தம். முனிவர்களுக்கெல்லாம் முதன்மையானவர் என்றும் அர்த்தமாகும்.

முனீஸ்வரன் கலியுகத்தில் அதர்மத்தை அழித்து நீதியை நிலை நாட்டும் தெய்வமாகப் போற்றப்படுகின்றார். நம் பாரத தேசத்தில் எல்லா மக்களுக்கும் வேறுபாடில்லாமல் அருள் தந்து மக்கள் குறைகளை தீர்க்கின்றார். ஊருக்கும் இடத்துக்கும் ஏற்றவாறு முனீஸ்வரன் பெயர் மாறும். பெயர் மாறினாலும் முனீஸ்வரன் ஒன்று தான். பாண்டி முனீஸ்வரனும் துடிப்பான

தெய்வமாகப் போற்றப்படுகின்றார். பாடிகாட் முனீஸ்வரராகவும் சடா முனியாகவும் பல ஆயிரக் கணக்கான பெயர்களில் முனீஸ்வரன் அழைக்கப் படுகின்றார்.

## முனீஸ்வரன் அருள்வாக்கு

முனீஸ்வரன் அனைத்து மக்களின் குறைகளையும் சாதி, இன, மொழி வேறுபாடில்லாமல் தீர்க்கும் தெய்வமாக இருக்கின்றார். அவரை வருந்தி வேண்டி அழைக்கும்போது பக்தர்களின் உடம்பில் இறங்கி அருள்வாக்கு சொல்லக் கூடியவர். பக்தர்களின் உடம்பில் இறங்கி அவர்களுக்கு எதிரே இருக்கும் பக்தர்களுக்கு குறைகளைக் கேட்டு அதைத் தீர்க்கும் வழிமுறைகளையும் அருள்வாக்கில் கூறுகின்றார். முனீஸ்வரன் பக்தர்களின் மேல் இறங்கி இறந்த காலத்தில் நடந்ததையும், நிகழ் காலத்தில் நடப்பதையும், எதிர்காலத்தில் நடக்கப் போவதையும் எதிரே இருப்பவர்களுக்கு துல்லியமாக மச்ச குறி சொல்பவர். கிராமங்கள் தோறும் மூனீஸ்வரருக்கு கோவில் உண்டு. கோவில் முனீஸ்வரராகவும், ஆலமர முனீஸ் வரராகவும் வணங்கப்படுகின்றார்.

## முனீஸ்வரனும், முனியாண்டியும் ஒன்றா?

முனீஸ்வரன் என்றாலும், முனியாண்டி என்றாலும் முனியப்பன் என்றாலும், முனுசாமி என்றாலும் எல்லாமே முனீஸ்வரரைத்தான் குறிக்கும்.

## முனீஸ்வரருக்கு படையல் பொருட்கள்

முனீஸ்வரருக்கு ஆரம்பத்தில் சைவப் பலிகளே இருந்துள்ளது. காலப்போக்கில் அசைவம் பலிகளாக மாறியுள்ளது.

## சைவப் பூசை செய்யும் முறை

முனீஸ்வரருக்கு ஆலமரத்தைச் சுற்றிலும் நாட்டு மாட்டுச் சாணத்தைத் தெளித்து முதல் நாள் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். பின்பு, அவுல், பொரி, கடலை, சுருட்டு, தேங்காய், வாழைப்பழம், பழச்சாறுகள், எலுமிச்சம் பழம், சர்க்கரை, ஊதுவத்தி, பச்சைக் கற்பூரம், வெற்றிலைப் பாக்கு, அறுசுவையான சாதங்கள், 7 வகையான காய்கறிகள், நிலக்கடலை, விபூதி போன்ற பொருட்களை படையல் செய்து வழிபடலாம்.

நாம் எந்தக் காரியத்திற்கு பயணம் சென்றாலும் முனீஸ்வரரை வணங்கி விட்டுச் செல்ல வேண்டும். எந்த வாகனமோ கால்நடைகளோ வாங்கினாலும் முனீஸ்வரை வழிபட்டு வருவது நல்லதாகும்.

தொழிற் விருத்திக்கும், விவசாய விருத்திக்கும் முனீஸ்வரர் நன்மை செய்வார். சகல காரியத் தடைகளுக்கும், தடையை நீக்குவார். எதிரிகள் தொல்லை விலகுவதற்கும் முனீஸ்வரர் அருள் செய்வார்.

ஏழை எளிய மக்களின் மனக்குழப்பங்களையும் பிரச்சினைகளும் சகல தடைகளையும் விலக்கி மகிழ்ச்சியான வாழ்க்கையைத் தருபவர் முனீஸ்வரர் ஆவார்.

## முனீஸ்வரரின் மந்திரங்கள்

ஓம் முனீஸ்வரா போற்றி
ஒய்யாற முனீஸ்வரா போற்றி
ஆம் முனீஸ்வரா போற்றி
ஆலமர முனீஸ்வரா போற்றி
ஆச்ச முனீஸ்வரா போற்றி
சுருட்டு முனீஸ்வரா போற்றி
சூரி முனீஸ்வரா போற்றி
ஓம் சடசட மடமட
மச்ச மூனீஸ்வரா போற்றி
ஓம் கருமுனியே போற்றி
ஓம் செம்முனியே போற்றி
ஓம் முனி முனி முனியா போற்றி
ஓம் சட சட ரீம் முனியப்பா போற்றி
ஓம் அங்சிங் முனியப்ப சாமியே போற்றி
ஓம் முறுக்கேறிய மூர்க்கா
செருகேறிய சேக்கா
அறுக்கேறிய அருவா மீசை
ராக் காவல் காக்கும் எல்லப்பா
எல்லை காக்கும் தெய்வமே
பாண்டி முனியாண்டியா
வா வா எங்கள் குறை தீர்த்து
அருள் செய்வாயாக
சிம் ஹ்ரீம் சிம் சிம் ஜம் வம்
லாட முனி, மொட்டை முனி, சட்டை முனி, சடை முனி
வட வட வா வா
முனியே ஓங்காரமாகவும், ரீங்காரமாகவும்
ஆடி அசைந்து ஆல மரங்கேறி
அருள் செய்ய ஓடி வா
முனி முனி முனியாண்டியா கூம்பம் சுவாகா

நம் குடும்ப பிரச்சினைகளில் இருந்தும் மனப் பிரச்சினைகளிடம் இருந்தும் ஆன்மா அருள் வேண்டி, பூசை செய்வோம். நம் பாரத்தின் தெய்வங்களை வணங்கி வழிபட்டு, நம் பாரத நாட்டு கலாச்சாரங்களை காத்து, தர்மத்தை போற்றி, நம் ஆன்மாவை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வோம்.




போலி இணையதளம் மூலம் பங்கு சந்தையில் முதலீடு செய்வது போல் காட்டி

# ரூ.48 லட்சத்தை ஏமாற்றிய குற்றவாளிகள்

## சைபர் க்ரைம் போலீஸாரின் விடாமுயற்சியால் பணம் முழுவதையும் மீட்டு உரியவரிடம் வழங்கிய காவல் ஆணையர் திருமதி.N.காமினி IPS அவர்கள்

போலியான இணைய தளம் மூலம் பங்கு சந்தையில் முதலீடு செய்து அதிக லாபம் பெற்றுத்தருவதாக கூறி ஓய்வுபெற்ற அரசு அதிகாரியிடம் ஆன்லைன் மூலம் ரூ.48 லட்சம் ஏமாற்றிய நபர்களிடமிருந்து பணத்தை மீட்டு, திருச்சி மாநகர காவல் ஆணையர் திருமதி. N.காமினி IPS அவர்கள் உரிமையாளரிடம் ஒப்படைத்தார்.

கடந்த அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் திருச்சி மாநகரம் கே.கே.நகர் காவல் நிலைய எல்லைக்குப்பட்ட ராக்போர்ட் நகரில் வசிக்கும் 75 வயது ஓய்வுபெற்ற அரசு அதிகாரி, பங்கு சந்தையில் முதலீடு செய்தால் அதிக லாபம் பெற்றுதருவதாக உறுதியளித்ததை நம்பி வாட்ஸ்ஆப்–ல் வந்த லிங்க் மூலம் ரூ.48 லட்சத்தை அனுப்பியுள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் உறுதியளித்தபடி பணம் திரும்ப கிடைக்காததால், தான் ஏமாற்றப்பட்டதை அறிந்த அந்த ஓய்வு பெற்ற அதிகாரி, திருச்சி மாநகர சைபர் குற்றப் பிரிவில் புகார் அளித்துள்ளார்.

இதுதொடர்பாக, திருச்சி மாநகர காவல் ஆணையர் திருமதி.N.காமினி IPS அவர்களின் உத்தரவின்பேரில், திருச்சி சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் மனுரசீது வழங்கப்பட்டு தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையில், மனுதாரரிடம் Wexdor.com என்ற போலி இணையதளம் மூலம், அவரின் வாட்ஸ்அப் எண்ணிற்கு லிங்க் அனுப்பி, மனுதாராருக்கு என மேற்கண்ட இணைய தளத்தில் ஒரு கணக்கு உருவாக்கப்பட்டு உண்மையாக பங்கு சந்தையில் முதலீடு செய்வதுபோல நம்ப வைத்து, மனுதாரரிடம் இருந்து ரூ.48 லட்சம் பணத்தை ஆன்லைன் மூலம் பெற்று ஏமாற்றி உள்ளனர்.

மனுதாரர் இழந்த பணம் குஜராத் மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில் உள்ள 2 வங்கி கணக்குகளுக்கு சென்றிருப்பதும், அந்த வங்கிகளில் இருந்து சுமார் 20 வங்கி கணக்கு களுக்கு மாற்றப்பட்டதும் விசாரணையில் தெரியவந்தது.

திருச்சி மாநகர சைபர் குற்றப்பிரிவு காவல்துறையினர் துரிதமாக செயல்பட்டு, சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு உடனடியாக மனுதாரர் இழந்த பணம் வரவு வைக்கப்பட்ட வங்கி கணக்குகளை முடக்கம் செய்ய கடிதம் அனுப்பினர்.

மேலும், காவல் துறையினரின் தொடர் நடவடிக்கையின் காரணமாக மனுதாரர் இழந்த பணம் ரூ.48 லட்சம் முழுவதும் மீட்கப்பட்டு, மனுதாரரின் வங்கி கணக்கில் திருச்சி நீதிமன்றத்தில் உத்தரவின் பேரில் வரவு வைக்கப்பட்டது. அதற்கான ஆவணங்களை திருச்சி மாநகர காவல் ஆணையர் அவர்கள் பாதிக்கப்பட்ட மனுதாரரை நேரில் அழைத்து வழங்கினார்.

தலைமை நிருபர்:
மு.பாண்டியராஜன் திருச்சி



### 18 சவரன் தங்க நகை, லேப்டா கைப்பையை தவறவிட்ட தம்பதி

# விரைந்து செயல்பட்டு மீட்ட விழுப்புரம் மாவட்ட ரோந்து காவலர்கள்

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே 18 சவரன் தங்க நகைகளை தவறவிட்ட தம்பதி போலீசாருக்கு கொடுத்த தகவலின் பேரில் நகைகளை மீட்டு வியப்பில் ஆழ்த்திய நெடுஞ்சாலை ரோந்து காவலர்கள்.

தாம்பரம் லட்சுமிபுரத்தில் வசிக்கும் பிரசாந்த் என்பவர் திருவண்ணாமலையில் தனது உறவினர் வீட்டு சுபகாரியத்துக்கு சென்றுவிட்டு வீடு திரும்பும்போது, திண்டிவனம் அடுத்த அம்மா டீ கடை அருகே தனது காரை நிறுத்தி டீ அருந்தியுள்ளார்.

அப்போது தனது தான் வைத்திருந்த கைப்பையை டீக்கடையிலேயே மறந்து வைத்துவிட்டு அங்கிருந்து கிளம்பி சென்றுள்ளார். அதில், 18 பவுன் தங்க நகை மற்றும் லேப்டாப் ஆகியவை இருந்ததுள்ளது.

சிறிது தொலைவு சென்ற பிறகுதான் தன்னுடன் கொண்டு வந்த கைப்பையை டீக் கடையிலேயே வைத்துவிட்டு வந்ததை அறிந்து அதிர்ச்சியாகி, உடனே காவல் துறைக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

தகவலின் பேரில் நெடுஞ்சாலை ரோந்து எண் 1 வாகனத்தில் பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.மாணிக்கவாசகர், தலைமை காவலர் திரு.வேல்முருகன் ஆகியோர் பிராசந்த் டீ அருந்தியதாக சொன்ன கடைக்கு சென்று விசாரணை மேற்கொண்டனர்.

அதில் பிரசாந்த் விட்டு சென்ற கைப்பை அந்த இடத்திலேயே இருந்ததை கண்டறிந்து உடனடியாக அதன் உரிமையாளருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

அதன் பேரில், ரோசனை காவல் நிலைய ஆய்வாளர் திருமதி.தரனேஸ்வரி அவர்களின் முன்னிலையில் தங்களது உடைமைகளை சரிபார்த்து காவல் துறையினரிடம் இருந்து பெற்றுக் கொண்டனர். மேலும் தவறவிட்ட 18 சவரன் மற்றும் லேப்டாப்பை மீட்டுத் தந்த காவல் துறையினருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

நிருபர்: **R.ராமநாதன்** விழுப்புரம்

ஒருபாத்திரம் நல்ல பாலில் ஒரு துளி விஷம் கலந்தாலும்
அந்த பால் முழுவதும் விஷமாகிவிடும்..
ஆனால், ஒரு பாத்திரம் விஷத்தில் ஒரு துளி பால் கலந்தால்
அந்த விஷம் முழுவதும் நல்ல பாலாக மாறுவதில்லை..
ஆகையால் நாம், தெளிந்த மனதில் களங்கமில்லா அன்புடன்
மனம், உடல், ஆரோக்கியத்துடன்
வாழ்வது சிறந்த வாழ்வியல் கலை..



ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்

## இந்திய அரசமைப்பு தினத்தை முன்னிட்டு சிவகங்கையில்

# SP திரு.இரா.சிவ பிரசாத் IPS அவர்கள் தலைமையில் உறுதிமொழியேற்பு

சிவகங்கை மாவட்ட காவல்துறை அலுவலகத்தில் இந்திய அரசமைப்பு தினத்தை முன்னிட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இரா.சிவபிரசாத் IPS அவர்கள் தலைமை யில் காவல் அதிகாரிகள் ஆளிநர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோர்கள் இந்திய அரசமைப்பு நாள் கீழ்க்கண்ட உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டின் இறையாண்மையும் சமநலச் சமுதாயமும், சமய சார்பின்மையும், மக்களாட்சி முறையும், அமைந்ததொரு குடியரசு நிறுவவும், அதன் குடிமக்கள் அனைவரும், சமுதாய, பொருளியல், அரசியல் நீதி, எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை, சமுதாயப்படி நிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை ஆகியவற்றை எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும், தனிமனிதனின் மாண்பு.

நாட்டு மக்களின் ஒற்றுமை, ஒருமைப் பாடு இவற்றை உறுதிப்படுத்தும் உடன் பிறப்புரிமையினை வளர்க்கவும் உள்ளார்ந்த உறுதியுடையராய், நம்முடைய அரசமைப்புப் பேரவையில், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம் என்று உறுதிமொழி எடுக்கப்பட்டது.

இதில் காவல் அதிகாரிகள், ஆளிநர்கள், அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். இதேபோன்று அனைத்து காவல் நிலையங்களிலும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

நிருபர்: C.**சிவகுருநாதன்** சிவகங்கை



## 10 ரூபாயில் சர்க்கரை நோய்க்கு தீர்வு

# ‘மூக்கிரட்டை கீரை’ தெரியுமா?



மூக்கிரட்டை கீரையின் பொடியை வாங்கி உண்பதால் உடல் எடையை கட்டுக்குள் வைக்கலாம். இதயம் வலுவாகும். கண் பார்வைக்கும், செரிமானத்துக்கும் கூட நல்லது. சிலவகை புற்றுநோயை எதிர்த்து செயலாற்ற ஆற்றல் கிடைக்கும். மூக்கிரட்டை கீரையை சாறாக்கி குடித்தால் இரத்தத்தில் இருக்கும் குளுக்கோஸ் அளவு குறையும். இன்சுலின் அளவும் மேம்படும். உங்களுக்கு இரத்த சர்க்கரை அளவு கூடுதலாக இருக்கும்பட்சத்தில் உணவுக்கு முன்பாக இந்த கீரை சாறு 10 மி.லி. குடியுங்கள். தொடர்ந்து செய்யும்போது சர்க்கரை அளவு கட்டுக்குள் வரும். மூக்கிரட்டையின் வேரை பொடியாக்கி அரிசி கழுவிய நீரில் 2 கிராம் மட்டும் கலந்து குடித்தால் வெள்ளைப்படுதல் பிரச்சனை குணமாகும்.

## பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்போர் மீது குண்டர் தடுப்பு சட்டம்

# SP Dr.K.கார்த்திகேயன் IPS அவர்கள் எச்சரிக்கை

கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் காவல் நிலைய பகுதியில் கடந்த 05.11.2025 அன்று 10 கிலோ கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்த ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த அபிராம் பிரதான் மகன் பிஷ்ணு சரண் பிரதான்(42) மற்றும் மனு பிரதான் மகன் நஹு பிரதான்(34) ஆகியோர்களை தொண்டாமுத்தூர் காவல்துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

மேலும் பொது ஒழுங்கு மற்றும் பொது சுகாதாரப் பராமரிப்பிற்கு பாதகமான செயலில் ஈடுபட்ட குற்றத்திற்காக விஷ்ணு சரண் பிரதான்(42) மற்றும் நஹு பிரதான்(34) ஆகியோர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.K.கார்த்திகேயன், IPS அவர்கள் பரிந்துரை செய்தார்.

அப்பரிந்துரையின் பேரில் கோவை மாவட்ட ஆட்சியர் திரு.பவன்குமார் ஜி.கிரியப்பனவர் IAS அவர்கள் மேற்கண்ட நபர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பித்தார்.

அந்த உத்தரவின் அடிப்படையில் கஞ்சா வழக்கு குற்றவாளிகளான விஷ்ணு சரண் பிரதான்(42) மற்றும் நஹு பிரதான்(34)



ஆகியோர்களை போலீஸார் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்தனர்.

மேலும் பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தாலோ, பொது சுகாதார பராமரிப்பிற்கு பாதகமாக செயல்பட்டாலோ அவர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எச்சரித்துள்ளார்.

பொதுமக்கள் தங்களது பகுதிகளில் இது போன்ற குற்ற செயலில் ஈடுபடும் நபர்கள் குறித்து தகவல் தெரிவிக்க 94981-81212 மற்றும் வாட்ஸ் அப் எண் 7708-100100 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

நிருபர்: **P.நட்ராஜ்** கோவை

# வருண முத்திரை



**பெருவிரலின் நுனியோடு சுண்டுவிரலின் நுனியைசேர்க்கவும்.ருசியின்மை அகலும், வறட்டுஇருமல் அகலும், இரத்தசோகை,தோல்நோய் அகலும்,இரத்தம் சுத்தமாகும்.தினமும் 2, கைகளிலும் சம்மணகாலிட்டு அமர்ந்து 10நிமிடம் செய்யவும்.**( சம்மணகாலிட்டு அமர்ந்து, இரு கைகளிலும் தினமும் 10 நிமிடம் செய்க... )



*கடலூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் கூடுதல் துணை காவல் கண்காணிப்பாளர் திரு. N. கோடீஸ்வரன் அவர்கள் தலைமையில் தூய்மை மிஷன் எனது குப்பை எனது பொறுப்பு, எனது அலுவலக தூய்மையை பாதுகாப்பேன், ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிபொருட்களை பயன்படுத்த மாட்டேன் என உறுதியளிக்கிறேன் என உறுதிமொழி மேற்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் திரு. அப்பாண்டைராஜ், திரு. சார்லஸ், காவல் அலுவலக அமைச்சுப் பணியாளர்கள் , மற்றும் காவலர்கள் உறுதிமொழி மேற்கொண்டனர்.*

சிறப்பு நிருபர்: **P.முத்துகுமரன்** கடலூர்




**செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:**

**editorpoliceparvai@gmail.com**

**செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438**





உலகில் உள்ள எழுதப்பட்ட அரசியல் அமைப்பு சட்டங்களில் மிகவும் நீளமானது என்கிற பெருமையை கொண்ட நமது அரசியலமைப்பு சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நவம்பர் 26-ம் தேதி அரசியலமைப்பு தினமாக நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. அரசியல் அமைப்பு தினத்தின் பெருமையை பறைசாற்றும் விதமாக, மதுரை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில், மாநகர காவல் ஆணையர் முனைவர் J.லோகநாதன் IPS அவர்கள் தலைமையில் இந்திய அரசியலமைப்பின் முகப்புரை வாசிக்கப்பட்டது. காவல் துணைஆணையர் (தலைமையிடம்) அவர்கள் உடனிருந்தார். இதில் காவல்துறையினர் அமைச்சுப்பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

சிறப்பு நிருபர்: J.**பீமராஜ்** மதுரை






திருவண்ணாமலை மாவட்டம் திருவெண்ணைநல்லூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தொட்டி குடிசை கிராமத்தைச் சேர்ந்த 23 வயதான மாற்றுத்திறனாளி பெண்ணுக்கு திருவெண்ணைநல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.அழகிரி உதவி ஆய்வாளர் திரு.அன்பழகன் மற்றும் காவலர்கள் சார்பாக கழிப்பறை கட்டிடம் கட்டி கொடுத்து மாற்றுத்திறனாளி பெண்ணை வியப்பில் ஆழ்த்திய நிகழ்ச்சி அப்பகுதி மக்களிடையே பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

சிறப்பு நிருபர்: **R.சக்திவேல்** திருவண்ணாமலை

# கண்டுபிடிக்கப்படாத திருட்டு: அரசே இழப்பீடு

## மதுரை உயர் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

நகை திருட்டு வழக்குகளில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க காவல் துறை தவறும் பட்சத்தில், பாதிக்கப் பட்டவர்களுக்கு இழப்பீட்டைத் தமிழக அரசே வழங்க வேண்டும் என மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு அண் மையில் பரபரப்பான தீர்ப்பை வழங்கி யுள்ளது. இத்தீர்ப்பு, திருட்டு வழக்குகளின் புலன் விசாரணையில் காவல்துறையின் பொறுப்பையும், பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைப்பதில் அரசின் கடமையையும் அழுத்தமாக வலியுறுத்துகிறது.

நீதிமன்றம் பிறப்பித்த இந்தத் தீர்ப்பில், தமிழக அரசு மற்றும் காவல்துறைக்கு 3 முக்கிய அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டுள்ளன:

1.இழப்பீடு வழங்க வேண்டும்:

நகை திருட்டு வழக்குகளில், காவல்துறை உரிய விசாரணை நடத்திய பின்னரும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடிய வில்லை அல்லது திருடுபோன நகைகளை மீட்க முடியவில்லை என்றால், பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையை தமிழக அரசே வழங்க வேண்டும்.

2. சிறப்புப் புலனாய்வுப் பிரிவு:

கடினமான திருட்டு வழக்குகளை திறம் படக் கையாளும் வகையில், திறமை மிக்க மற்றும் அனுபவமுள்ள அதிகாரிகளைக் கொண்ட ஒரு சிறப்பு காவல் பிரிவை உடனடியாக அமைக்க வேண்டும். இது, சிக்கலான வழக்குகளின் விசாரணைத் தரத்தை உயர்த்த உதவும்.

3.நிலுவை வழக்குகள் ஆய்வு:

ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகக் கிடப்பில் (நிலுவையில்) உள்ள அனைத்து திருட்டு வழக்குகளின் கோப்புகளையும் ஆய்வு செய்வதற்காக, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (ADSP) தலைமையில் ஒரு சிறப்புக் கூட்டத்தை நடத்தி, வழக்குகளின் நிலை குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

### தீர்ப்பின் தாக்கம்

இந்தத் தீர்ப்பு, திருட்டு போன்ற குற்றச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட குடிமக் களுக்கு, நீதி கிடைப்பதில் ஏற்படும் தாமதம் அல்லது தோல்விக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும் என்ற புதிய முன்னுதாரணத்தை உருவாக்குகிறது. புலன் விசாரணையில் ஏற்படும் தோல்வியால், குடிமக்களின் உடைமை உரிமைகள் பாதிக்கப்படுவதால், அரசு உரிய பரிகாரத்தை வழங்க வேண்டும் என்பதை நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

தகவல்: குரு.சரவணன் திண்டுக்கல்







## திருநெல்வேலி SP திரு.N.சிலம்பரசன் தலைமையில்

# மாதாந்திர ஆய்வுக் கூட்டம்

## சிறப்பாக பணிபுரிந்தோருக்கு நற்சான்றிதழ்கள் வழங்கல்

திருநெல்வேலி மாவட்டத்தில் உதவி காவல் கண்காணிப்பாளர், துணை காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கான மாதாந்திர ஆய்வு கூட்டம் மாவட்ட காவல் அலுவலகத்தில், திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.N.சிலம்பரசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள அனைத்து வழக்குகளின் புலன் விசாரணை குறித்தும், நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்தும், கஞ்சா மற்றும் புகையிலை போன்ற போதைப் பொருட்கள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும், பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்கள் மீதும் ரவுடிகள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், நீதிமன்ற அலுவல்கள் குறித்தும் மற்றும் பல்வேறு நிகழ்வுகள் குறித்தும் ஆய்வு நடைபெற்றது.

அதன் முன்னதாக திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மாவட்ட காவல்துறையின் இருசக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள், கனரக வாகனங்கள் மற்றும் காவலர்கள் அவசர காலங்களில் பணிக்கு செல்லும் இருசக்கர வாகனங்கள், உயர் அதிகாரிகள் பயன்படுத்தும் வாகனங்கள், நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறதா என காவல் கண்காணிப்பாளர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு வாகன ஓட்டுநர்களுக்கு முக்கிய அறிவுரைகள் வழங்கி, வாகனங்களின் நிறை குறைகளை கேட்டு தெரிந்து கொண்டார்.

பின்பு மாவட்டத்தில் கொலை, திருட்டு மற்றும் போக்சோ வழக்குகளில் உள்ள சாட்சிகளை விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி எதிரிகளுக்கு தண்டனை பெற்று கொடுத்த காவல் அதிகாரிகள், நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது மற்றும் போதைப் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்ட நபர்களை திறம்பட செயல்பட்டு கைது செய்தது போன்ற செயல்களில் ஈடுபட்ட காவல் ஆளிநர்கள் மற்றும் அரசு வழக்குரைஞர்கள் உட்பட மாவட்டத்தில் சிறப்பாக பணிபுரிந்த 200 பேரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரில் அழைத்து நற்சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், துணை காவல் கண்காணிப்பாளர்கள், அரசு வழக்குரைஞர்கள், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.

நிருபர்: **ஜோதிபாசு திருநெல்வி**



# கூலி தொழிலாளி தவறவிட்ட 50,000 ரூபாயை விரைவில் மீட்டு தொழிலாளியிடம் ஒப்படைத்த காவல் துறையினர்

கஞ்சனூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட எசாலம் மெயின் ரோட்டில் வசிக்கும் துரைசிங்கம் என்பவரின் மகன் பாஸ்கர்(63) என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக நண்பரிடம் இருந்து ரூபாய் 50,000 கடனாக பெற்று வந்து தனது சைக்கிளில் வரும் பொழுது கீழே எங்கேயோ தவறி விழுந்து விட்டதாக பதட்டத்துடன் காவல் நிலையத்தை நாடி தனது பணம் காணவில்லை என தெரிவித்தார்.

அதன் அடிப்படையில், உடனடியாக உதவி ஆய்வாளர் திரு.கார்த்திகேயன் மற்றும் தலைமை காவலர் திரு.ஏழுமலை ஆகியோர் அப்பகுதிகளில் உள்ள சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்து பணத்தை தேடி சென்ற நிலையில், பணம் பையுடன் தெருவின் ஓரமாக கிடந்ததை கண்டறிந்து அதனை எடுத்து வந்து கூலித் தொழிலாளியிடம் ஒப்படைத்தனர்.

இந்நிகழ்ச்சி அப்பகுதி மக்களிடையே பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியதுடன் கூலி தொழிலாளி போலீசாருக்கு மிக்க நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

சிறப்பு நிருபர்: **P.முத்துகுமரன்** கடலூர்



*அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் DSP திரு.ரவி சக்கரவர்த்தி அவர்கள் த. பழூர் காவல் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டார். மேலும், சட்டம்-ஒழுங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து காவல் அதிகாரிகளுக்கு எடுத்துரைத்தார். காவல்நிலையத்திற்கு புகார் மனுக்கள்மீது உடனடியாக தக்க விசாரணை செய்து தீர்வு காணும்படி அறிவுரை வழங்கினார். இந்நிகழ்வில் காவல் ஆய்வாளர் திரு.சிக்கந்தர் பாட்ஷா அவர்கள் உதவியாளர் மற்றும் காவலர்கள் உடன் இருந்தார்கள்.*

நிருபர்: R.**தங்கபாண்டியன்** அரியலூர்




திரு.சந்தோஷ் ஹாதிமணி IPS அவர்கள் ஆணைப்படி

# இணையவழி மோசடியில் ஈடுபட்டவர் குண்டர் சட்டத்தில் அடைப்பு



இணையவழி மூலம் மோசடி செய்து பொதுமக்களிடம் பணத்தை ஏமாற்றும் செயலில் ஈடுபட்டு பொது ஒழுங்குக்கு குந்தகம் விளைவித்த வந்த நபர் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

திருநெல்வேலி மாநகரில், ஆன்லைனில் முதலீடு செய்து அதிக பணம் சம்பாதிக்கலாம் என பொது மக்களை நம்ப வைத்து போலியான வங்கி கணக்குகளில் பணத்தை செலுத்த ஆசையை தூண்டி, ஆன்லைன் மோசடி செய்து பொதுமக்களிடம் பணத்தை ஏமாற்றும் செயலில் ஈடுபடுவதன் மூலம் பொது ஒழுங்கு பராமரிப்பிற்கு குந்தகம் விளைவித்து வந்த 'கணினி வெளிச் சட்டக்குற்றவாளியான' கேரளா மாநிலம், மலப்புரம் மாவட்டம், எடப்பட்டா, எப்பிகாட்டைச் சேர்ந்த அஷ்ரப் மகன் ஆசிக்(27) என்பவரை திருநெல்வேலி மாநகர காவல் துணை ஆணையர் Dr.V.பிரசண்ண குமார் IPS (மேற்கு), காவல் உதவி ஆணையர் (பொறுப்பு) திரு.செந்தா மரைக் கண்ணன், காவல் ஆய்வாளர் திருமதி.சண்முகவடிவு (சைபர் கிரைம்) ஆகியோரின் பரிந்துரையின் பேரில் திருநெல் வேலி மாநகர காவல் ஆணையர், திரு.சந்தோஷ் ஹாதிமணி IPS அவர்களின் ஆணைப்படி 27.11.2025–ம் தேதி குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டார்.

நிருபர்: **ஜோதிபாசு** திருநெல்வேலி



## பாராட்டு..

***தூத்துக்குடி மாவட்டம் சிப்காட் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வாகன தணிக்கையின் போது கஞ்சா மற்றும் கத்தியுடன் வந்த தப்பியோட முயன்ற குற்றவாளியை துரத்தி பிடித்து கைது செய்து அசம்பாவிதம் ஏதும் நடக்காமல் தடுத்து சிறப்பாக பணியாற்றிய காவல் துறையினரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ஆல்பார்ட் ஜான் IPS அவர்கள் நேரில் அழைத்து பாராட்டினார்.***

நிருபர்: **N.ராமசாமி** தூத்துக்குடி



# SP Dr.R.ஸ்டாலின் IPS அவர்கள் உத்தரவில் 5 பேரை கைது செய்த தனிப்படை போலீஸார்

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக நாகர்கோவில், தக்கலை, கன்னியாகுமரி பகுதிகளில் இருசக்கர வாகனங்கள் திருட்டு புகார்கள் தொடர்ந்து வந்த வண்ணம் இருந்தன. இதுசம்பந்தமாக உடனடியாக குற்றவாளிகளை கண்டறிந்து கைது செய்ய SP Dr.R.ஸ்டாலின் IPS அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

SP உத்தரவின் படி நாகர்கோவில் உட் கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் திரு.சிவசங்கரன் அவர்களின் மேற்பார்வையில் உதவி ஆய்வாளர் திரு.அஜய் ராஜா ஆகியோர் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது.

தனிப்படை விசாரணையில் இந்தத் தொடர் இருசக்கர வாகன திருட்டில் ஈடுபட்டது திரு நெல்வேலி மாவட்டம் கோட்டையடி பகுதியை சேர்ந்த கண்ணன் என்பவரின் மகன் மாரியப்பன்(22) மற்றும் நான்கு 18 வயதிற்கு உட்பட்ட இளஞ்சிறார்கள் என்பது கண்டு பிடிக்கப்பட்டது. அவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களிடம் இருந்து 7 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த இருசக்கர வாகனங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு காவல் நிலையங்கள் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள காவல் நிலைய வழக்குகளில் சம்பந்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

*சிறப்பு* நிருபர்: **J.ஜெயவேல்முருகன்** நாகர்கோவில்



**கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**

**ஒன்றுநன்று உள்ளக் கெடும். (109)**

விளக்கம்: முன்பு நன்மை செய்தவரே பின்பு நம்மைக் கொலை செய்வது போன்ற தீமையைச் செய்தாலும் அவர் முன்பு செய்த ஒப்பற்ற நன்மையை நினைத்த அளவில் அத்தீமை மறையும்.

# குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கான இழப்பீடு திட்டம்

ஒரு குற்றத்தை பொறுத்த வரையில் அந்த குற்றத்தால் உடலாலோ, உடைமையாலோ பாதிப்பு மற்றும் இழப்பீடு யாருக்கு ஏற்படுகிறதோ அவரே பாதிக்கப்பட்ட நபர் (victim). அப்படி பாதிக்கப்பட்ட நபருக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கான ஒரு திட்டம் தான் குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கான இழப்பீடு திட்டம் (victim compensation scheme) இந்திய குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 357 (அ) அதை பற்றிய விளக்கம்.

பழங்காலத்தில் இந்து மனு தர்ம சாஸ்திரத்தின் அடிப்படையில் சூத்திரர்களின் காலகட்டத்தில் பொதுவான இந்து தத்துவ கோட்பாட்டின் அடிப்படையில் ஒரு குற்றத்தால் பாதிக்கப்பட்ட நபருக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டு வந்தது அதன் பின்பு 12 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் சட்டத்தில் உரிமையியல் மற்றும் குற்றவியல் தவறுகளுக்கான (civcil wrong and criminal wrong) தீங்கியல் சட்டம் உருவாக்கப்பட்டு, அதன் அடிப்படையில், குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டு வந்தது. அதன் பின்பு குற்ற விசாரணை முறைச்சட்டம் 1898 மற்றும் 1973 இருந்து 2008 வரை பிரிவு 357ன் படி குற்றத்தால் பாதிக்கப்பட்ட நபருக்கு நஷ்ட ஈடு தொகை வழங்கப்பட்டு வந்தது. அதன் பின்பு குற்ற விசாரணை நடைமுறைச்சட்டம் மாலித்து குழுமம் அறிவுரையின்படி 2009ஆம் ஆண்டு குற்றவிசாரணை நடைமுறைச் சட்டத்தில் பிரிவு 357 ல் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு 357(அ) இன்று குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு திட்டம் உருவாக்கப்பட்டது.

**இழப்பீடு திட்டத்தின் செயல்பாடுகள்**

1. மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் மூலம் குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கான நஷ்டஈடு தொகைக்கான திட்டம் வகுக்கப்படும்.
2. மாநில மாவட்ட சட்டப் பணி குழுவின் மூலம் குற்றத்தால் பாதிக்கப்பட்ட நபருக்கான நஷ்ட ஈடு தொகை வழங்கப்படும்.
3. குற்றத்தில் குற்றவாளி விடுதலையாகும் பொழுதோ அல்லது குற்ற வழக்கில் இருந்து குற்றவாளி விலகினாலோ பாதிக்கப்பட்ட நபருக்கு நஷ்ட ஈடு தொகை வழங்கப்படும்.
4. ஒரு குற்றத்தை புலன் விசாரணை செய்ய முடியா மல் குற்றவாளியை கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட நபருக்கு மாவட்ட சட்டபணி குழு மூலமாக நஷ்ட ஈடு தொகை வழங்கப்படும்.

**நஷ்ட ஈடு தொகை பெற தகுதிகள்**

1. ஒரு குற்றத்தில் பாதிக்கப்பட்ட நபர் உதாரணமாக குற்றவாளியால் தாக்கப்பட்டு உடலுக்கு ஏற்படும் சாதாரண காயம் முதல் கொடுங்காயம் வரை, கற்பழிப்பு, மரணம் பாதிப்புக்கு ஏற்றவாறு.
2. ஒரு குற்றத்தின் போது குற்றவாளியால் ஏற்படும் சேதம், திருட்டு ஆகியவற்றை இழந்து இருக்கக்கூடிய நபர்.

**நஷ்ட ஈடு தொகை வழங்கும் முறை**

ஒரு குற்றத்தின் விசாரணை அடிப்படையில் குற்றவாளி தண்டிக்கப்படுகின்ற பொழுது அதனுடன் சேர்த்து அபராதமாக விதித்து அந்த அபராத தொகையை நஷ்ட ஈடாக வழங்கலாம். மேலும் தீர்ப்பின் போது நீதிபதி பாதிக்கப் பட்டவருக்கான இழப்பீடு மற்றும் நஷ்டத்தை கருத்தில் கொண்டு மாவட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு பரிந்துரை செய்வதின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். மேலும் ஒரு குற்றத்தால் உயிரை இழந்தவருக்கு மேற்கண்ட வழிகளில் அவருடைய சட்டப்படி வாரிசுகளுக்கு நஷ்ட ஈடு தொகை வழங்கப்படும்.

**நஷ்ட ஈடு வழங்குவதற்கான காலகெடு**

ஒரு குற்றம் விசாரணை நடைபெறும் காலகட்டத்தில் அந்த நீதிமன்றம் பாதிக்கப்பட்டவரின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு இடைக்கால நஷ்ட ஈடு தொகையை வழங்கலாம். பின்னர் வழக்கின் முடிவில் தீர்ப்பின் அடிப்படையில், நஷ்ட ஈடு தொகை, குற்றவாளிக்கு விதிக்கப்படும் அபராதம், பாதிக்கப்பட்டவருக்கு போது மானதாக இருந்தால் அந்த தொகையை மேல்முறையீடு செய்யும் காலகட்டத்திற்குள் வழங்க உத்தரவிடலாம்.

அதே போல் குற்றவாளி கண்டுபிடிக்கபடாமல் இருக்கக் கூடிய வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபர் குற்றம் நடந்ததில் இருந்து மூன்று வருட காலத்திற்குள் நஷ்ட ஈடு மாநில, மாவட்ட சட்டப்பணியின் மூலம் நஷ்ட ஈடு தொகை கேட்டு பெறலாம்.

குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் திருத்தம் கொண்டு வரப்பட்ட பின்னர் வெவ்வேறு மாநிலங்களில் நஷ்ட ஈடு தொகை பாதிக்கப்பட்டவருக்கு ஏற்படும் இழப்பு களை பொறுத்து நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் ஒரு குற்றத்தால் பாதிக்கப்பட்ட நபர் இந்த சட்டத்தின் அடிப்படையில் நஷ்ட ஈடு கோரி நலம் பெற அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

வழக்கறிஞர்: **K.T.சிவக்குமார்**B.A.,B.L., Contact: 8946042012


எங்களிடம் கன்ஸ்ட்ரக்ஷன், வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள் தரமான முறையில் கட்டி தரப்படும்.
டிரஸ் & பெப்பிரிக்கேசன் ஒர்க்ஸ் சிறந்த முறையில் செய்து தரப்படும்.
எங்களிடம் ரப்பிஸ், மணல் கிடைக்கும்
JCB, டிப்பர் வாடகைக்கு கிடைக்கும்
அயான் கன்ஸ்ட்ரக்ஷன்
-:: தொடர்புக்கு ::-
Prop: S.அன்வர்தீன் ✆ 98424 75150
10, கான்மியான் பள்ளிவாசல் தெரு, பாலக்கரை, திருச்சி- 620 008.


மாத மாதம் வருமானம் தரக்கூடிய வீட்டு மனைகள்
கொடைக்கானல், பெரும்பாறை
APPROVED DTCP APPROVED
ஏலக்காய், வாழை, பலா, அவகாடோ, மிளகு, பட்டை, கிராம்பு, காபி, பாக்கு மரம், சில்வர் ஓக் போன்ற மரங்களுடன் சொத்து
சதுர அடி ரூ.500 மட்டுமே
SR PROPERTIIES
REAL ESTAE, MARKETING
தொடர்புக்கு: ✆ 786 78 28 203, 638 298 5562

**Posted at - patrikachannel Egmore** Posted between 8-14 Every Month.
Date of publication Everymonth 1st week. **Postel Registration Number TN/TBM/187/2023-25**
**POLICE PARVAI TAMIL MONTHLY** R.Dis.No.1132/2015 RNI. **TNTAM/2015/66520**

# RAM&CO SOLICITORS LIMITED

Regulated by the Solicitor Regulation Authority SRA NO 8000919
and Registered as a Company with company House 12385372

BEC 2, GO 1, Wakering Road, London. IG 116GN ☎ **020 350 41 891**

**Admin Office (INDIA) :**
No.151/3, 9th Cross, Ponnagar,
Trichy-620001. ☎ **0431 248 2167**
✉ info@ramsolicitors.co.uk ✆ **044 7714 23 89 24**

## LEGAL SERVICES

UK Student VISA
UK Skilled Worker VISA
UK Innovator VISA



**Business formations in UK**

**Buying & Selling Property in UK**

**Ramachandran Saravanan**
B.A.,LLB., D.L.L..,LLM (London)
Solicitor of England and Wales,
Advocate (India),

4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO